Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 312

செவ்வாய்க்கிழமை
04 ஒக்ரோபர் 2022

புரட்டாதி 17 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 12
விலை : ரூ. 50

## கசிப்புடன் கைதான 15 வயது மாணவன்

யாழ்ப்பாணம், ஒக். 4
3 லீற்றர் கசிப்பு மற்றும் 16 லீற்றர் கோடாவை உடைமையில் வைத்தி ருந்த குற்றச்சாட்டில் 15 வயது பாடசாலை மாண வன் ஒருவன் கைது செய்யப்பட்டு.

11 ➤

## 217 கிலோ கஞ்சா மீட்பு சந்தேகத்தில் 3பேர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 4
வல்வெட்டித்துறை, பொலிகண்டி கடற்கரை வாடிப்பகுதியில் 217 கிலோ கேரள கஞ்சாப் பொதிகள்மீட்கப்பட்டமை தொடர்பில் மூவர் பொலி ஸாரால் கைது

11 ➤

பொலிஸார் அதிரடி வேட்டை:

## ஹெரோய்ன் விற்பனை; ஒரேநாளில் 3 பேர் கைது

### 2 பெண்களும் உள்ளடக்கம்

யாழ்ப்பாணம், ஒக். 4
யாழ்ப்பாணக் குடாநாட்டில் உயிர் கொல்லி ஹெரோய்ன் போதைப் பொருளை விற்பனைக்காக உடை மையில் வைத்திருந்த குற்றச்சாட் டில் இரண்டு பெண்கள் உட்பட மூன்று பேர் நேற்று கைது செய்யப்பட்டுள்ள னர்.
மணியம்தோட்டப் பகுதியில் 5.5 கிராம் உயிர் கொல்லி

11 ➤

## லிட்ரோ விலை மேலும் குறையும்

கொழும்பு, ஒக். 4
நாளை நள்ளிரவு முதல் லிட்ரோ எரி வாயு சிலிண்டரின் விலை

11 ➤

## கோதுமை மா விலை குறையும்?

கொழும்பு, ஒக். 4
கோதுமை மா அடங் கிய 100 கொள்க லன்கள் கொழும்பு துறைமுகத்தை வந் தடைந்

11 ➤

# இலங்கையை ஆதரித்து 6 நாடுகளே கை உயர்த்தும்

## ஜெனிவாவில் அரசுக்கு நெருக்கடி

கொழும்பு, ஒக்ரோபர் 4

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கை குறித்த தீர் மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டால் தமக்குப் போதிய ஆதரவு கிடைக்காது என இலங்கை கருதுகின்றது. ஆறு நாடுகள் மாத்திரமே தீர் மானத்துக்கு எதிராக, இலங்கை அரசாங்கத்துக்கு ஆதரவாக வாக்களிக் கும் என்று கணிப்பிடப்பட்டுள்ளது.

11 ➤



"அப்ப இவைக்கு வெறும் ஆறுபேர்தான் ஆறுதலா இருக்கப்போயினம் கண்டியளோ"



## கிளிநொச்சி விபத்தில் குடும்பஸ்தர் சாவு!

கிளிநொச்சி, ஒக். 4
வீதி விபத்தில் சிக்கிய இளம் குடும்பஸ்தர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.
சுண்டிக்குளம் கல்லாறு பகுதியைச் சேர்ந்த சிவ லிங்கம் பவிராஜ் (வயது - 27) என்ற

11 ➤

## டீசல் விலையை குறைக்க முடியாது

### காஞ்சன கைவிரிப்பு

கொழும்பு, ஒக். 4
பெற்றோல் இறக்குமதி யில் இலாபம் கிடைக்கப் பெற்றதால் விலை குறைக்கப்பட்டுள்ளது.
ஆயினும் தற்போதைய நிலையில் டீசலின் விலையை குறைக்க முடியாது என்று வலு சக்தி மற்றும்

11 ➤

தாயையும், மகளையும் கட்டி வைத்து

## பட்டப்பகலில் கொள்ளை!

### நாவற்குழியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக். 4
நாவற்குழியில் நேற்றுப் பட்டபகலில் வீடொன்றுக் குள் புகுந்த கொள்ளை யர்கள் வீட்டிலிருந்த தாய் மற்றும் மகளை

11 ➤

## எரிபொருள் விநியோகம் பாதிப்பின்றி தொடரும்

### அமைச்சர் உத்தரவாதம்

கொழும்பு, ஒக். 4
எரிபொருள் விநியோக நடவடிக்கைகளுக்கு இடை யூறுகள் ஏற்படாது என்று அமைச்சர் காஞ்சன விஜயசேகர

11 ➤

## நிமோனியாவால் ஒருவர் சாவு!

யாழ்ப்பாணம், ஒக். 4
ஊர்காவற்றுறையைச் சேர்ந்த அந்தோனியேசு தாஸ் (வயது - 61) என் பவர் நிமோனியா காய்ச் சல் காரணமாக

11 ➤

## கடும் காய்ச்சலால் குடும்பஸ்தர் பலி

யாழ்ப்பாணம், ஒக். 4
கடும்காய்ச்சலால் பாதிக்கப்பட்ட ஒருவர் நேற்றுமுன் தினம் உயிரிழந்துள்ளார்.
வரணி வடக்கைச் சேர்ந்த கிட்டிணன் தங்கலிங்கம் (வயது - 48) என்பவரே இவ்வாறு உயிரிழந்

11 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச அழுத்தம் மூலம் எதையும் சாதிக்கமுடியாது

## நாமல் ராஜபக்ச கருத்து



கொழும்பு, ஒக். 4

**ஜெனிவா அமர்வுகளின் கவனக்குவிப்பைப் பெற பல்வேறு வடிவங்களில் போராட்டங்களை மேற்கொண்டு தமிழ் மக்களை எத்தனை ஆண்டுகளுக்கு தமிழ் அரசியல்வாதிகள் ஏமாற்றப்போகின்றார்கள்? சர்வதேச அழுத்தத்தால் இங்கு எதையும் சாதிக்க முடியாது.**

-இவ்வாறு ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை முற்றாக இரத்துச் செய்யக் கோரி நாடாளவிய ரீதியில் ஊர்தி வழியாகச் சென்று கையெழுத்துத் திரட்டும் போராட்டத்தின் இறுதிநாள் நிகழ்வு ராஜபக்சக்களின் தலைநகரான அம்பாந்தோட்டை தங்காலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இது தொடர்பில் கருத்துரைக்கும் போதே நாமல் ராஜபக்ச மேற்கண்டவாறு கூறினார்.

எதிரணியினரின் போராட்டங்கள் மூலம் சட்டங்களை நீக்க முடியாது. ஆட்சியையும் கவிழ்க்க முடியாது. அதேவேளை, போராட்டங்கள் மூலம் சர்வதேச அழுத்தங்கள் ஊடாக எதையும் சாதிக்கவும் முடியாது.

பெரமுன தலைமையிலான ஆட்சியில் ஜனாதிபதியும் பிரதமரும் மாறினார்களே தவிர ஆட்சி மாறவே இல்லை. இதைத் தமிழ் அரசியல்வாதிகளும், காலிமுகத் திடல் போராட்டத்தை வழிநடத்திய வர்களும் கவனத்திற்கொள்ள வேண்டும்- என்றார். (ச-22)

# பதவிகளை ஒப்படைக்காமையே வங்குரோத்துக்குக் காரணம்!

## எதிரணி பிரதம கொறடா சுட்டிக்காட்டு



கொழும்பு, ஒக். 4

நாடாளுமன்றத்திலுள்ள குழுக்களின் தலைமைப் பதவி, எதிரணிகளுக்கு முன்கூட்டியே வழங்கப்பட்டிருந்தால் நாடு வங்குரோத்து நிலையை நோக்கிச் செல்வதைத் தடுத்திருக்கலாம்- இவ்வாறு எதிரணி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

கோப் மற்றும் கோபா குழுக்களின் தலைமைப்பதவி எதிரணி உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் என நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான குழுவில் இணக்கம் எட்டப்பட்டிருந்தது.

சபாநாயகரும் இந்த உறுதிமொழியை வழங்கினார். ஆனால், இன்னும் அது நடக்கவில்லை. வளர்ச்சியடைந்த நாடுகளில், நாடாளுமன்ற முறையில் நாடாளுமன்றக் குழுக்களின் தலைமைப்பதவி எதிரணிக்கே வழங்கப்படும். இதுதான் நாட்டுக்கும் நல்லது.

இற்றைக்கு இரு வருடங்களுக்கு நிதி தொடர்பான குழுவின் தலைமைப்பதவியைக் கோரினோம். வழங்கப்படவில்லை. அவ்வாறு வழங்கியிருந்தால், இரண்டு வருடங்களுக்கு முன்னரே நாடு வங்குரோத்து நிலையை நோக்கிப் பயணிக்கின்றது என எச்சரித்திருப்போம்- என்றார். (ம-14.44)

# விவசாயிகளுடன் வீதிக்கு இறங்கிய மைத்திரிபால!

கொழும்பு, ஒக்.4

நெல்லுக்கு உரிய விலை மற்றும் அடுத்த பருவத்துக்கு உரிய நேரத்தில் உரம் வழங்க வேண்டும் என்று கோரி சிறிலங்கா சுதந்திர விவசாயிகள் முன்னணி மற்றும் பொலநறுவை விவசாயிகள் இணைந்து நேற்றுக் காலை பொலநறுவையில் கவனவீர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் அவரது மகன் ஆகியோர் கலந்துகொண்டு வீதியில் அமர்ந்து தமது ஆதரவை வெளிப்படுத்தினர்.

ஒரு கிலோ நெல்லுக்கு 150 ரூபா உத்தரவாத விலையை வழங்க வேண்டும் என்று கோரி முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டத்தில் பல பகுதிகளைச்சேர்ந்த விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (எ-இ)

# அரச ஊழியர்களுக்கு வாய்ப்பூட்டு அரசின் ஜனநாயக விரோதச்செயல்!

## டலஸ் அழகப்பெரும அதிருப்தி



கொழும்பு, ஒக். 4

சர்வதேச தகவலறியும் தினத்தில் அரச ஊழியர்களின் தகவல் அறியும் சுதந்திரத்தை மட்டுப்படுத்தும் வகையில் வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருபம் உண்மையில் நகைப்புக்குரிய விடயமாகும்.

இவ்வாறு டலஸ் அழகப்பெரும தனது ருவிற்றர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அரச ஊழியர்கள் கடமை நேரங்களில் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவது தொடர்பில், கடந்த 27ஆம் திகதி பொதுநிர்வாக அமைச்சால் சுற்றுநிருபம் ஒன்று வெளியிடப்பட்டது. அரச ஊழியர் ஒருவர் சமூக வலைத்தளங்களில் கருத்து வெளியிடுவது தண்டனைக்குரிய குற்றம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை இலங்கையில் அறிமுகப்படுத்திய ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தாலேயே இந்தத் தடைச் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளமை உண்மையில் நகைப்புக்குரிய விடயமாகும். அரசாங்கத்தின் ஜனநாயக விரோதச் செயற்பாடுகளைத் தோற்கடிக்க அனைவரும் ஒன்று திரளவேண்டும்- என்றார். (ச-இ)

# முறைகேடான இடமாற்றங்களுக்கு எதிராக விரைவில் சட்டநடவடிக்கை

கொழும்பு, ஒக். 4

பொலிஸ் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படும் முறைகேடான இடமாற்றங்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பில் ஆலோசனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கடந்த மே மாதம் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களில் அரசியல்வாதிகளின் வீடுகள் மற்றும் அலுவலகங்கள் என்பன சேதமாக்கப்பட்டு, தீக்கிரையாக்கப்பட்டன.

அதன்போது அதைத் தடுக்கத் தவறிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் மற்றும் ஏனைய அதிகாரிகள் தற்போது பொலிஸ் திணைக்களத்தால் முறைகேடான வகையில் இடமாற்றம் செய்யப்படுகின்றனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையிலேயே பொலிஸ் திணைக்கள உயரதிகாரிகள் மேற்கொள்ளும் தன்னிச்சையானதும் முறைக்கேடானதுமான இடமாற்றங்கள் குறித்து சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பில் ஆலோசிக்கப்படுகின்றது என்று தெரியவருகின்றது. (ம-14.இ)



# மக்கள் விரோதச் செயற்பாட்டை முன்னெடுத்தால் பின்வாங்குவீர்!

## அதியுயர் பாதுகாப்பு வலயம் தக்க சான்று என்கிறார் மைத்திரி

மக்கள் விரோதச் செயற்பாட்டை முன்னெடுத்தால் இறுதியில் பின்வாங்க வேண்டிய நிலையே ஏற்படும் என்பதற்கு அதி உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் மீளப்பெறப்பட்டுள்ளமை சிறந்த சான்றாகும்.

- இவ்வாறு சுதந்திரக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அதிஉயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இரத்துச் செய்துள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே மைத்திரி இவ்வாறு கூறினார்.

'தவறான முடிவுகளை எடுத்தால் பின்னடைவே ஏற்படும். மக்களுக்குத் தேவையான விடயங்களை செய்யாமல் மக்கள் விரோதச் செயலில் ஈடுபட்டால் இதுபோலத்தான் நடக்கும் என்பதை புரிந்துகொள்ளவேண்டும். தற்போதுள்ள அமைச்சுகளே மக்களுக்குப் பெரும் சுமையாகும். இந்நிலையில் புதிய அமைச்சர்கள் நியமிக்கப்படவுள்ளமை பெரும் அபத்தமாகும்' - என்றார். அதேவேளை, தேசியப் பேரவையில் அங்கம் வகிக்காத கட்சி களின் முடிவைப் பாராட்டி சுதந்திரக்கட்சி விசேட அறிக்கையொன்றையும் வெளியிட்டுள்ளது. (ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ், சிங்கள மொழிகளில் சட்டக்கல்லூரி இறுதித் தேர்வு

### மாணவர்கள் கோரிக்கை ஆராய்வு

கொழும்பு,ஒக். 4

சிங்களம் மற்றும் தமிழ் மொழிமூலமாணவர்களுக்கு சட்டக் கல்லூரியில் முதலாம், இரண்டாம் மூன்றாம் ஆண்டு களில் தத்தமது மொழிகளில் பரீட்சை எழுதக்கூடிய வகையில் வாய்ப்பளிக்கப்பட்டது. எனினும் அது தற்போது, இல்லாமற் செய்யப்பட்டுள்ளது. அந்த வாய்ப்பு மீண்டும் வழங்கப்படவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக்க பத்திரண தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த நீதியமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ச, மாணவர்களின் கோரிக்கைக்கு அமைய தமிழ், சிங்கள மூலம் சட்டக்கல்லூரி பரீட்சை எழுதுவது தொடர்பான அதிவிசேட வர்த்தமானி கடந்த 2015 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர், அந்த அதிவிசேட வர்த்தமானி செல்லுபடியற்றதாக்கப்பட்டு, மீண்டும் சட்டக் கல்லூரி பரீட்சைகளை 2023 ஆம் ஆண்டு முதல் ஆங்கில மொழியில் எழுத வேண்டுமென அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டது. அதை மாற்றியமைக்க வேண்டும் என்று மாணவர்கள் மீண்டும் கோரிக்கை விடுத்தனர். இந்த விடயம் தொடர்பில் ஆராயவேண்டும் என்று சட்ட ஆய்வுக்குழுவின் தலைவராகவுள்ள, பிர தம நீதியரசரிடம் பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளது. சட்ட ஆய்வுக்குழு முன்வைக்கும் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (எ-இ)

# சுற்றுலாவிகளின் வருகை வீழ்ச்சி!

கொழும்பு,ஒக். 4

இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை அறிவித்துள்ளது.

ஓகஸ்ட் மாதத்துடன் ஒப்பிடுகையில் செப்ரெம்பர் மாதத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகை 21 வீதத்தால் குறைவடைந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதத்தில் 47 ஆயிரத்து 293 சுற்றுலாப் பயணிகள் வந்திருந்தனர் எனவும், செப்ரெம்பர் மாதத்தில் 29 ஆயிரத்து 802 பயணிகளே வந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வருடத்தில் கடந்த செப்ரெம்பர் மாதத்திலேயே மிகவும் குறைந்தளவிலான சுற்றுலாப் பயணிகளின் வருகை பதிவாகியுள்ளது என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை அறிவித்துள்ளது. (எ-இ)

# முதலாம் தரத்திலிருந்து இனி ஆங்கிலக் கல்வி!



கொழும்பு,ஒக். 4

உத்தேச கல்வி சீர்திருத்தத்தின் கீழ் இனி முதலாம் தரத்திலிருந்து மாணவர்களுக்கான ஆங்கிலம் மொழி கற்பித்தல் செயற்பாடு முன்னெடுக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நாடாளுமன்ற அமர்வில் நேற்றுக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முதலாம் தரத்திலிருந்து பிள்ளைகளுக்கு ஆங்கில மொழியைக் கற்பிக்கும் பணி அடுத்த வருடம் மார்ச் மாதம் முதல் ஆரம்பிக்கப்பட வுள்ளது என அவர் தெரிவித்தார். (ச-இ)


கப்ருக பவர் ப்லே

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

2022 செப்டெம்பர் 29 (சீட்டிழுப்பு 1044) விசேட சீட்டிழுப்பின்...




கப்ருக பவர் ப்லே விசேட டிக்கெட் சீட்டிழுப்பில் வெற்றி பெற்றவர்கள்

ரூ.ஒரு மில்லியன் வெற்றியாளர்கள் இருவர்

கம்பஹா - 01 குருணாகல் - 01

ரூ.ஒரு இலட்சம் வெற்றியாளர்களின் மாவட்டங்கள்...

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | - 11 | மாத்தறை | - 05 | புத்தளம் | - 03 | முல்லைத்தீவு | - 02 |
| களுத்துறை | - 04 | ஹம்பாந்தோட்டை | - 02 | அநுராதபுரம் | - 06 | பொலன்னறுவை | - 02 |
| கண்டி | - 07 | யாழ்ப்பாணம் | - 04 | பதுளை | - 03 | கிளிநொச்சி | - 01 |
| மாத்தளை | - 01 | வவுனியா | - 01 | இரத்தினபுரி | - 04 | மொணராகல | - 01 |
| நுவரெலியா | - 01 | மட்டக்களப்பு | - 01 | கேகாலை | - 02 | அம்பாறை | - 01 |
| காலி | - 02 | குருணாகல் | - 07 | கம்பஹா | - 06 | | |

தலா பத்தாயிரம் ருபா வீதம் நாடளாவிய ரீதியிலான வெற்றியாளர்கள் 182...

கப்ருக வெற்றியாளர்கள் 30,165,960.00 க்குள் ரூ.30,165,960.00 பணம் பகிர்ந்தளிக்கப்படும்....

அபிவிருத்தி லொத்தர் சபை

இல.356, கலாநிதி கொல்வின் ஆர்.டி. சில்வா மாவத்தை,
யூனியன் பிளேஸ், கொழும்பு 02.

www.dlb.lk

TikTok

#FamilyFirst

Family Pairing: இலங்கை TikTok இளைஞர்களைக் காப்பாற்றுவதற்கான உறுதியான வழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பொருளாதாரம் அடுத்தாண்டு மேலும் குறுகும்!

## எச்சரித்தது உலக வங்கி

கொழும்பு, ஒக். 4

**இலங்கைப் பொருளாதாரம் அடுத்த ஆண்டில் 10 பில்லியன் டொலருக்கும் மேல் சுருங்கக் கூடும். இதனால் இலங்கை மிக மோசமான பொருளாதார நிலைமையை நோக்கித் தள்ளப்படும் என உலக வங்கி எச்சரித்துள்ளது என்று சிறி ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் வர்த்தக கற்கைப் பிரிவின் பேராசிரியர் ஜனக குமாரசிங்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:- கடன்களுக்கான வட்டி 25 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த வட்டியில் கடனைப் பெற்று முதலீடு செய்து, அதன் மூலம் கிடைக்கும் இலாபமானது, பெற்ற கடனுக்கான வட்டியை செலுத்தவும் போதுமானதாக இருக்காது. இதன் காரணமாக அனைத்து வர்த்தகங்களும் நிலையற்ற நிலைமைக்கு சென்றுள்ளன.

சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகங்கள் மட்டுமல்ல மிகப் பெரிய வர்த்தகங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. புதிதாக வர்த்தகங்களை ஆரம்பிப்பதும் சீர்குலைந்துள்ளது. இவை பொருளாதாரத்தில் அதிர்வை ஏற்படுத்தும். இதனால் அடுத்த 2023ஆம் ஆண்டு இலங்கையின் பொருளாதாரம் மோசமான நிலைமைக்குச் செல்லலாம் என உலக வங்கி சுட்டிக்காட்டிகிறது.

இப்படியான நிலைமையில், பொருளாதாரத்தை கட்டியெழுப்புவது மற்றும் பொருளாதாரத்தை முன் நோக்கித் தள்ளும் வங்கி உட்பட நிதிக் கட்டமைப்புகள் மட்டுமின்றி அவற்றுடன் சம்பந்தப்பட்ட ஏனைய நிறுவனங்களும் பெரும் ஆபத்தை சந்திக்கலாம் - என்றார். (ச-இ)



## கோத்தா ஆட்சியில்

# மருந்து இறக்குமதியில் ரூ.428 கோடி நிலுவை

கொழும்பு, ஒக். 4

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபயவின் ஆட்சிக்காலத்தில் மருந்துப்பொருள் இறக்குமதியில் 428 கோடி ரூபா நிலுவைத் தொகை வைக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த மே மாதம் வரை அரசாங்க மருத்துவமனைகளுக்கான மருந்துப்பொருள் இறக்குமதி விடயத்தில் இந்த நிலுவைத் தொகை செலுத்தப்படாமல் உள்ளது.

பிரதான மருந்துப்பொருள் இறக்குமதியாளர்களுக்கு 311 கோடி ரூபாவும், மக்கள் வங்கிக்கு 92 கோடி ரூபாவும், இலங்கை வங்கிக்கு 25 கோடி ரூபாவும் நிலுவைத் தொகையாக செலுத்தப்பட வேண்டியுள்ளதாகக் கூறப்படுகிறது. (ம-14-இ)



# கோப் குழு எம்.பி.க்கள்; பெயர்கள் வெளியாகின

கொழும்பு, ஒக். 4

'கோப்' குழுவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பெயர்களை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் அறிவித்துள்ளார்.

இதன்படி ஜகத் புஷ்பகுமார, ஜாகன வக்கும்புர, லொஹான் ரத்வத்தே, இந்திக்க அனுருத்த ஹேரத், டி.வீ. சானக, சாந்த பண்டார, அநுர குமார திஸாநாயக்க, ரவூப் ஹக்கீம், பாட்டலி சம்பிக்க ரணவக்க, மஹிந்தானந்த அளுத்கமகே, ரோஹித அபேகுணவர்த்தன, ஹர்ஷ டி சில்வா, இரான் விக்கிரமரத்ன, நிமல் லான்சா, முஸ்ஸாரப், நலீன் பண்டார ஜயமஹா, எஸ்.எம். மரிக்கார், முஜிபூர் ரஹ்மான், ரோஹினி குமாரீ விஜேரத்ன, சஞ்சீவ எதிரிமான்ன, பிரேம்நாத் சி தொலவத்த, உபுல் மகேந்திர ராஜபக்ச, இரா.சாணக்கியன், ராஜிகா விக்கிரமசிங்க, மதுர விதானகே, ரஞ்சித் பண்டார ஆகியோர் இந்தக் குழுவில் உள்ளடங்குகின்றனர்.

எனினும், கோப் குழுவின் தலைவர் இன்னும் பெயரிடப்படவில்லை.

அப்பதவியை எதிரணி கோரி இருந்தாலும் அது தொடர்பில் அரசாங்கத்தின் முடிவு இன்னும் வெளியாகவில்லை.

அத்துடன், கோப் குழுவின் தலைவராக செயற்பட்ட சரித ஹேரத் தற்போது டலஸ் அணியில் உள்ளார். கோப் குழுவுக்கு இந்த முறை அவரின் பெயர்கூட உள்வாங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-14-44)

# இறக்குமதி அரிசியில் உலோகங்கள் இல்லை

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 4

இறக்குமதி செய்யப்பட்ட அரிசியில் எந்தவித உலோகங்களும் கலக்கப்படவில்லை என ஆய்வில் உறுதி செய்யப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட 275 அரிசித் தொகுதிகளிலிருந்து மாதிரிகள் பெறப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப்பட்ட நிலையில் இந்த விடயம் உறுதிசெய்யப்பட்டுள்ளது. இறக்குமதி செய்யப்பட்ட அரிசியில் தீங்கை ஏற்படுத்தும் உலோகங்கள் கலந்துள்ளன என்று அண்மையில் தகவல்கள் வெளியாகியிருந்தன.

அதனையடுத்து துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கொள்கலன்கள் மற்றும் துறைமுகத்தில் இருந்து விடுவிக்கப்பட்ட அரிசியில் இருந்து மாதிரிகள் பெறப்பட்டு ஆய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இந்தநிலையில் அரிசியில் எவ்வித உலோகப் பொருள்களும் கலக்கப்படவில்லை என அறிக்கையொன்றின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-இ)

# பொருளாதார குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துங்கள்!

## ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

கொழும்பு. ஒக். 4

பொருளாதாரக் குற்றங்களுக்கு காரணமானவர்கள் அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். அவர்கள் அரசியல் குழப்பங்களுக்கும் மக்கள் போராட்டங்களுக்கும் வழிவகுத்தவர்கள் இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் பொருளாதாரத்துக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்திய இந்தப் பொருளாதாரக் குற்றங்கள் தான், நாட்டில் ஏற்பட்டுள்ள பெரும் பஞ்சத்துக்கும் மக்கள் வீதியில் இறங்கிப் போராடும் நிலைமைக்கும் காரணமானவை.

பொருளாதாரக் குற்றங்கள் தடுக்கப்பட்டிருந்தால் இவை நிகழ்ந்திருக்காது. இவற்றுக்கு காரணமானவர்கள் என குற்றம்சாட்டப்படுபவர்கள், ராஜபக்சவினரும், அவர்களுக்கு நெருக்கமான அதிகாரிகளும்தான். அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு மக்களுக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்களின் வரிசையில் உள்ளனர்.

ஆகவே, பொருளாதார நெருக்கடிக்குக் காரணமான அனைவருக்கும் எதிராகச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் - என்றார். (ச-இ)

## பொதுத்துறை ஊழியர்களுக்கு

# சம்பளம் வழங்குவதற்கு 93 பில். ரூபா செலவு

கொழும்பு, ஒக். 4

நாட்டில் சுமார் 15 லட்சம் பொதுத் துறை ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு அரசாங்கத்துக்கு மாதம் ஒன்றுக்கு 93 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமாக செலவு [illegible] குறிப்பிட்டுள்ளார்.

அந்த அதிகாரி மேலும் குறிப்பிடுகையில்,

அரசசேவைக்கான ஆட்சேர்ப்பு தற்போதுமட்டுப்படுத்தப்பட்டபோதிலும், அடுத்த வருடம் அரச சேவைக்கு [illegible]ப்பு செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய மருத்துவர்கள், பொறியியலாளர்கள் உள்ளிட்ட தொழில் வல்லுநர்கள் அரச பணியில் சேர்க்கப்படவுள்ளனர். இதற்கான பரிந்துரைகளை வழங்க இரண்டு தனித்தனிக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது - என்றார். (ம-14-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கெஹலியவுக்கு அதிசயக்கண்களா?

இலங்கையில் உணவுப்பாதுகாப்பற்ற தன்மை இப்போதுதான் ஆரம்பிக்கின்றது. ஒக்ரோபர் மாதம் தொடக்கம் அடுத்த வருடம் ஜனவரி மாதம் வரையிலான காலப்பகுதியில் உணவுப் பாதுகாப்பற்ற நிலையால் இலங்கை மிகுந்த சிரமங்களையும் பின்னடைவுகளையும் எதிர்கொள்ளும் என்று பகிரங்கமாக எச்சரித்திருக்கின்றது சர்வதேச நாணய நிதியம். ஆப்கானிஸ்தான், எதியோப்பியா, சூடான் போன்று கடுமையான உணவுப் பாதுகாப்பற்ற தன்மை இலங்கையில் காணப்படவில்லை என்ற போதிலும் அத்தகைய நிலையை நோக்கி இலங்கை நகர்ந்து சென்றுகொண்டிருக்கின்றமை தெளிவு என்பதாக அமைந்துள்ளது நாணய நிதியத்தின் எச்சரிக்கை.

பொருளாதார நெருக்குவாரங்களுடன் இரண்டறக் கலந்த நிலையில் வளர்ந்து வந்த உணவுப் பணவீக்கம்தான் இன்று இலங்கையில் ஏனைய பிரச்சினைகளை விட பூதாகரமாக வியாபித்துள்ளது. மக்களின் அன்றாட நுகர்வுப் பொருள்களுக்கான இந்தப் பணவீக்கம் 120 தொடக்கம் 300 வீதம் வரையில் எகிறியிருக்கின்றது. இந்தப் பிறழ்வு நிலைக்கான முற்றுப்புள்ளி கண்களுக்கு எட்டிய தூரம் வரையில் இல்லை என்பதும் இங்கு குறிப்பிட்டுக் காட்ட வேண்டிய கசப்பான உண்மை.

உணவுப் பணவீக்கம் தொடர்பாக கடந்த சில நாள்களாகப் பல்வேறு விதமான எச்சரிக்கைகளை மருத்துவத்துறையினர் விடுத்தனர். போசணைக் குறைபாடு இலங்கையர்களை தீவிரமாக ஆட்கொள்ளும் காலம் வெகுதொலைவில் இல்லை என்பது அவர்களின் எச்சரிக்கையின் சாராம்சமாக இருந்தது. ஆனால், அந்த எச்சரிக்கைகளில் 85 வீதமானவை வெறும் புனைவுகளும் பொய்களும் என்று மறுத்துரைத்த சுகாதாரத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, உணவுப் பணவீக்கத்தால் ஏற்படலாம் என்று கருதப்படும் பாரதூரமான பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்குப் போதுமானளவு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் விளக்கம் கொடுத்திருந்தார்.

உணவுப் பணவீக்கம் என்பது ஓரிரு இரவுகளில் ஏற்படும் பொருண்மிய மாற்றம் அல்ல. பல மாதங்களாக நிலவிய தொடர்ச்சியான நலிவு நிலையால் ஏற்படும் ஓர் உச்சப் பிறழ்வே அது. அதேபோன்று உணவுப் பணவீக்கத்தை ஓரிரு இரவுகளில்சரி செய்து விடவும் முடியாது. இது நீண்டதும் நெடியதுமான முறைமைகள் மற்றும் நுட்பங்கள் வாயிலாகவே தீர்வைத் தேடவேண்டிய விவகாரம். இவ்வாறிருக்கையில், உணவுப் பணவீக்கம் தொடர்பாக ஏற்படக்கூடிய தளம்பல்கள் மற்றும் பின்னடைவுகளுக்கு எதிராக தாம் எடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ள நடவடிக்கைகள் தொடர்பான தெளிவுபடுத்தலை கெஹலிய ரம்புக்வெல முன்வைக்கவேண்டும்.

நாணயத்தாள்களை அச்சிட்டுக் குவிப்பதன் மூலமோ அல்லது கடன்களை மாறிமாறிப் பெறுவதன் மூலமோ தீர்த்துவிடும், தீர்க்க முனையும் விடயமல்ல உணவுப் பணவீக்கம். இவ்வாறான செயற்பாடுகள் மூலம் உணவுப் பணவீக்கம் இன்னுமின்னும் அதிகரிக்குமே தவிர குறையாது. இலங்கையர்கள் எவரினதும் கண்களுக்குப் புலப்படாத, 'உணவுப் பணவீக்கத்துக்கு எதிரான அரசின் செயற்பாடுகள்' கெஹலியவின் கண்களுக்கு மட்டுமே புலப்படுகின்றன என்றால், அவரின் கண்கள், நடக்காததையெல்லாம் நடப்பதாகக் காணும் அதிசயக் கண்களாகத்தான் இருக்கவேண்டும். சளாப்பல்களை விடவும் ஆக்கபூர்வமான செயல்களே இலங்கையைக் காப்பாற்றும் என்பதை கெஹலிய போன்றவர்கள் ஏன் இன்னும் உணரமறுக்கிறார்கள்?

நாளொரு நல்வார்த்தை

" ஒருவர் துன்பப்படும்போது நிபந்தனை ஏதுமின்றி உதவுவது தான் நட்பு"!

- மகாத்மா காந்தி



# உணவுப் பாதுகாப்பற்ற நிலை இலங்கையில் தொடர்கின்றது!

**கொழும்பு, ஒக். 4**

**இந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதல் எதிர்வரும் ஜனவரி மாதம் வரையான காலப்பகுதியில் இலங்கை உட்பட உலகில் 19 நாடுகளில் உணவுப் பாதுகாப்பற்ற நிலைமை தொடரும் என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் மேலும் தெரிவித்ததாவது:-

உலக உணவுத்திட்டம் கடந்த ஜூன் மாதம் முதல் முறையாக இலங்கையைப் பட்டினியால் வாடும் நாடுகள் பட்டியலில் சேர்த்தது. இந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதல் எதிர்வரும் ஜனவரி மாதம் வரையான காலப்பகுதியில் இலங்கை உட்பட உலகில் 19 நாடுகளில் உணவுப் பாதுகாப்பற்ற நிலைமை தொடரும்.

கடுமையான உணவுப் பாதுகாப்பற்ற நிலைமை நிலவும் நாடுகளின் வரிசையில் ஆப்கானிஸ்தான், எத்தியோப்பியா, நைஜீரியா, தென் சூடான், சோமாலியா, ஏமன் ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ளதுடன் இலங்கை அந்த ஆபத்தை எதிர்நோக்கி வருகின்றது. அத்துடன் ரஷ்யா, உக்ரைனை ஆக்கிரமித்துள்ளமை, காலநிலை மாற்றம், பிராந்திய மோதல்கள் மற்றும் தொற்று நோய் நிலைமை என்பன இந்த உணவு நெருக்கடிக்கு காரணமாக உள்ளன - என்றுள்ளது. (ம-14,இ)

# தொழில் இல்லாதோர் இலங்கையில் அதிகம்

கொழும்பு, ஒக். 4

இலங்கையில் தொழில் வாய்ப்புக்கள் இல்லாதிருப்போரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது என்று புள்ளிவிவரத் திணைக்களத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஜூன் மாதத்துடன் நிறைவடைந்த இரண்டாம் காலாண்டுப் பகுதியில் வேலை வாய்ப்பு இல்லாதவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. வட்டி வீத உயர்வு, இறக்கு மதிக்கான கட்டுப்பாடுகள், பணவீக்கம் உள்ளிட்ட பல காரணிகளால் இந்த நிலைமை உருவாகியுள்ளது.

முதலாம் காலாண்டில் வேலை வாய்ப்பற்றோர் எண்ணிக்கை 4.3 வீதமாகக் காணப்பட்டதாகவும், இரண்டாம் காலாண்டில் இது 4.6 வீதமாக உயர்வடைந்துள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. நாட்டில் நிலவி வரும் கடுமையான பொருளாதார நெருக்கடி நிலைமைகளால் முழுமையான அளவில் முயற்சியாண்மைகளை மூடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை - இரண்டாம் காலாண்டில் மொத்த தேசிய உற்பத்தியானது 8.4 வீத பின்னடைவைச் சந்தித்துள்ளது என்றும் புள்ளிவிவரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-14,இ)

நாளை 05.10.2022 புதன்கிழமை புரட்டாதி - 18

சுபநேரம் : 04.32 - 06.02
ராகுகாலம்: 12.02 - 01.32
கேதாரகௌரி விரதாரம்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதையைத் தடுப்பது இளைஞரின் கரங்களில்

## காதர் மஸ்தான் தெரிவிப்பு



**மன்னார், ஒக். 4**

**அதிகரித்து வரும் போதைப்பாவனையிலிருந்து எமது எதிர்காலச் சந்ததியை மீட்டெடுப்பது இளைஞர்களது கைகளிலேயே தங்கியுள்ளது. போதைப்பொருள் விநியோகத்தினரையும் பாவனையாளர்களையும் கண்டறிந்து அவர்களை இல்லாதொழிக்கும் சக்திகளாக இளையோர் மாறவேண்டும் - இவ்வாறு இராஜாங்க அமைச்சரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான காதர் மஸ்தான் தெரிவித்தார்.**

மன்னாரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விளையாட்டு நிகழ்வொன்றில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று போதைப்பொருள் வியாபாரமும் அதற்கு அடிமையாவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துச் செல்கின்றது. இளைஞர்கள் விளையாட்டில் அக்கறை காட்டுவது போன்று போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த முன்வருவார்களாயின் போதையற்ற சமுதாயத்தை உருவாக்க முடியும்.

ஒரு கிராமத்தில் விளையாட்டுக்களில் மட்டுமல்ல சகல விடயங்களிலும் முன்னேற்றம் காண்பதற்கு இளைஞர்கள் தங்களை அர்ப்பணிக்கவேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் உயிர்கொல்லி ஹெரோய்ன் உள்ளிட்ட போதைப் பொருள்கள் வியாபாரத்தில் ஈடுபடுபவர்களையும் அதற்கு அடிமையானோரையும் இனம் காண்பது அந்தந்தப் பகுதி இளைஞர்களால்தான் முடியும்.

அரசோ அல்லது பொலிஸாரோ இவற்றைக் கட்டுப்படுத்துவார்கள் என நம்பி இருப்பதைவிடுத்து இளைஞர்களாகிய நீங்கள் அவற்றை தடுத்து நிறுத்தி அவர்களுக்கு எமது பண்பாட்டை விளக்கி சிறந்த சமுதாயத்தை உருவாக்க வழிவகுக்க வேண்டும். அரச அதிகாரிகளின் சரியான செயற்றிட்டங்கள் இன்மையால்தான் போர் முடிவடைந்து பல வருடங்கள் கடந்தும் இன்னமும் மக்கள் அரசின் வாழ்வாதாரத்தையே நம்பியுள்ளனர்.

ஆகவே வளர்ந்து வரும் நாடுகளில் இளைஞர்கள் மாற்றுசக்தியாக உருவாகிநிற்பதைப்போன்று எமது நாட்டு இளைஞர்களும் சிறந்த எதிர்காலச் சந்ததியை உருவாக்க வளர்ச்சிப் பங்காளிகளாக செயற்படவேண்டும். விளையாட்டாக இருந்தாலும் சரி கல்வி மற்றும் வேறு திட்டங்களாக இருந்தாலும் சரி நாம் யாவரும் ஒன்றிணைந்து சரியான திட்டங்களை வகுத்து அபிவிருத்திகாக முனைய வேண்டும் - என்றார். (ச-60)

# வடமாகாணத்தில் மழைக்கு வாய்ப்பு!

கொழும்பு, ஒக். 4

வடக்கு மற்றும் வடமேல் மாகாணங்களில் மழைக்கு அதிக வாய்ப்புள்ளது என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை பெய்யும். சப்ரகமுவ மாகாணத்திலும் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகமாக பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது.

ஊவா மாகாணம் மற்றும் அம்பாறை மாவட்டத்தின் சில இடங்களில் மாலை அல்லது இரவு வேளையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளிலும், வடக்கு, வடமத்திய மற்றும் தென் மாகாணங்களிலும் திருகோணமலை மற்றும் புத்தளம் மாவட்டங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50-55 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும்.

இடியுடன் கூடிய மழையின்போது தற்காலிகமாக பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களைக் குறைத்துக்கொள்ள போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் - என்றுள்ளது. (ம)

# இளவாலையில் மோ. ஷெல் மீட்பு



யாழ்ப்பாணம், ஒக். 4

இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இளவாலை பகுதியில் மோட்டார் ஷெல் ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் தனியார் காணியொன்றை அதன் உரிமையாளர் துப்புரவுக் குட்படுத்தியபோது சந்தேகத்துக்கிடமான பொருள் அவதானிக்கப்பட்டது.

அதையடுத்து உரிமையாளரால் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு விரைந்த இளவாலை பொலிஸார் மோட்டார் ஷெல்லை அடையாளம் கண்டு மீட்டனர். அத்துடன் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்துள்ளனர். (ச-125)

# சமுர்த்தி கொடுப்பனவுகளை சீர்செய்ய 'கியூ.ஆர்' குறியீடு!

## அரசு பரிசீலனை

கொழும்பு, ஒக். 4

சமுர்த்திக் கொடுப்பனவுகள் உள்ளிட்ட அரசால் வழங்கப்படும் ஏனைய நலக்கொடுப்பனவுகளை சீர்செய்வதற்கு கியூ.ஆர் முறையை அறிமுகப்படுத்த அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.

இந்த நடைமுறையின்கீழ் சமுர்த்தி பயனாளிகளைத் தவிர, அரசாங்கத்தின் உதவி தேவைப்படும் ஏனையோரும் இணைத்துக்கொள்ளப்படுவர் என நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

அரசின் நலன்புரி மானியங்களை வழங்குவதற்கு தகுதியானவர்களைக் கண்டறியும் புதிய வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் குறித்த வேலைத்திட்டத்தை டிஜிற்றல் மயமாக்கும் நோக்கிலும் நலக்கொடுப்பனவுகள் தேவைப்படுவோரை அடையாளம் காணவும் மற்றும் அவற்றை தவறாகப் பயன்படுத்துவதைத் தடுக்கவும் இந்த கியூ.ஆர். நடைமுறை உதவும் என நிதியமைச்சகம் மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)



# குடிதண்ணீர்த் திட்டம் மக்கள் பாவனைக்கு

யாழ்ப்பாணம், ஒக். 4

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட முறிப்பு பகுதியில் சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்கும் திட்டம் மக்கள் பாவனைக்கு நேற்றுமுன்தினம் முதலாம் திகதி கையளிக்கப்பட்டது. சத்தியசாயி சர்வதேச நிறுவன வேலைத்திட்டத்தின் அனுசரணையில் 23ஆம் விஜயபாகு காலாட்படை பிரிவால் இந்தக் குடிதண்ணீர் திட்டம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் சத்திய சாயி சர்வதேச நிறுவனத்தின் தலைவர் மனோகரன், தேசிய சேவைகள் இணைப்பாளர் குலேந்திரன் சிவராம், வடமத்திய பிராந்தியத் தலைவர் தவீசன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-27)

# சாவ. சந்தையில் சைக்கிள் திருட்டு

சாவகச்சேரி, ஒக். 4

சாவகச்சேரி பொதுச்சந்தைப் பகுதியில் நிறுத்திவைக்கப்பட்ட சைக்கிள் இனந்தெரியாதோரால் திருடப்பட்டுள்ளது என பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

சாவகச்சேரி நகரசபை பணியாளர் ஒருவர் சந்தை வளாகத்தில் தனது சைக்கிளை பூட்டிவிட்டு கடமைகளை முடித்துவிட்டு வந்து பார்த்தபோது சைக்கிள் திருடப்பட்டமை அவதானிக்கப்பட்டது. அதனையடுத்து சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. இந்த முறைப்பாடு தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-9)

# இலவங்குடா கடற்பரப்பில் கடலட்டைப் பண்ணைகள்!

## அகற்றக்கோரி மக்கள் தொடர் போராட்டம்



மன்னார், ஒக். 4

கிளிநொச்சி , பூநகரி - இலவங்குடா கடற்பரப்பில் பாரம்பரிய தொழில்கள் பாதிக்கப்படும் வகையில் அமைக்கப்பட்ட கடலட்டைப் பண்ணைகளை அகற்றுமாறு கோரி நான்காவது நாளாகவும் மக்கள் போராடி வருகின்றனர்.

இது தொடர்பில் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்ததாவது:-

எமது பாரம்பரிய தொழிலுக்கு இடையூறுவிளைவிக்கும் அட்டைப் பண்ணைகளை அகற்றக்கோரி நாம் கடந்த நான்கு நாள்களாகப் போராடி வருகின்றோம். எனினும், எமது போராட்டத்தை எவரும் கண்டுகொள்ளவில்லை. உரிய அதிகாரிகள் இதுதொடர்பில் எந்தவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. ஆகவே எமது வாழ்வாதாரமான கடற்றொழிலை மீட்பதற்கு வடக்கிலுள்ள தமிழ் மக்கள் அனைவரும் குரல் கொடுக்கவேண்டும் - என்றனர். (ச-213)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது மன்ற உறுப்பினர்

### திருமதி மகேஸ்வரி வல்லிபுரம்

(உரிமையாளர் - ஆஷா பிடைவை நவீன சந்தை, சாவகச்சேரி)

அவர்கள் 01.10.2022 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு மன்றம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது. (CR 38188) (3/6)

**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்**

## மரண அறிவித்தல்



### திரு. பேரம்பலம் சிவசுப்ரமணியம்

(முன்னாள் உரிமையாளர், தாசன் ரேடிங் கம்பனி)

மலர்வு 08.05.1934 — உதிர்வு 02.10.2022

வேலணை வடக்கு 5ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் இல.59, குமாரசாமி வீதி, கந்தர்மடம், இல. 94/12, விவேகானந்த மேடு, கொட்டாஞ்சேனையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. பேரம்பலம் சிவசுப்ரமணியம் அவர்கள் கடந்த (02.10.2022) ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பேரம்பலம், பார்வதிப்பிள்ளை தம்பதியினரின் அன்புப்புதல்வரும் காலஞ்சென்ற வல்லிபுரம், யோகம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற ஜெயலட்சுமி சிவசுப்ரமணியம் அவர்களின் பாசமிகு கணவரும் Dr.சிவதாஸ் (உளமருத்துவ நிபுணர், யாழ். போதனா வைத்தியசாலை), ஜெயந்தி, Dr.சண்முகதாஸ் (NHSL), வசந்தி (Australia), சுகந்தி (Audit Officer, NIBM) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், Dr.சிவனேஸ்வரி (NHSL), காலஞ்சென்ற குகானந்தா, Dr.வனிதா (DGH, Kilonochchi), கோணேஸ்வரன் (Australia), அருணோதயன் (Australia) ஆகியோரின் அன்பு மாமனாரும் அபிநயா, கோகுலன், தனுஷன், பிரணவன், விவேகா, ஸ்ரீமன் ஆகியோரின் அன்புப்பேரனும், காலஞ்சென்றவர்களான அன்னலட்சுமி, மயில்வாகனம், பராசக்தி, சரஸ்வதி, சண்முகரட்ணம், சுப்பையா ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரத்ன மலர்ச்சாலையில் 05.10.2022 புதன்கிழமை காலை 8.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 06.10.2022 வியாழக்கிழமை காலை 8.00 மணிமுதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மாலை 3.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் ஆரம்பிக்கப்பட்டு தகனக்கிரியைக்காக பொரளை கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் : குடும்பத்தினர் - 077 3420538**
**இல.94/12, விவேகானந்த மேடு, கொழும்பு-13.**

(CSCR 38185) (3/6)

## மரண அறிவித்தல்

தோற்றம் 20 . 07 . 1945



மறைவு 03 . 10 . 2022

### நாகமணி கணபதிப்பிள்ளை (மணி)

(ஓய்வுபெற்ற சிரேஷ்ரசாலைப் பரிசோதகர், இலங்கை போக்குவரத்துச் சபை (C.T.B) வட மாகாணம்)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் சைவப் பாடசாலை வீதி முத்தட்டுமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமணி கணபதிப்பிள்ளை (மணி) (ஓய்வுபெற்ற சிரேஷ்ரசாலைப் பரிசோதகர் இலங்கை போக்குவரத்துச் சபை (C.T.B) வடமாகாணம்) அவர்கள் நேற்று (03.10.2022) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமணி வள்ளியம்மை ஆகியோரின் அன்பு மகனும், புஸ்பராணியின் அன்புக் கணவரும் சித்திரா, சுபத்ரா, கேசவன், காயத்திரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற ஜீவதாசன் மற்றும் சிவரூபன், சுசிகரன் ஆகியோரின் அன்பு மிகு மாமனும், தாட்சாயினி, சுயன், ருக்சிகா, மிருதிகா, தருசிகன், மதனீசன், குகராம், கபிசனி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.10.2022) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**077 977 3164** **தகவல்: குடும்பத்தினர்**

(CS 20855) (3/6)



வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ். வண்ணையம்பதி வேங்கட வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தின் மஹோற்சவ 7ஆம் நாளின் வெண்தாழித்திருவிழா நேற்றுமுன்தினம் மாலை மிகச்சிறப்பாக இடம்பெற்றது. இன்றையதினம் தேர்த்திருவிழாவும் நாளை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (ய-27)


**மாபிள் வேலை**

உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில் மாபிள் பதித்து தரப்படும். ஒரு சதுர அடி 80 ரூபாய், பூச்சு வேலை, கட்டு வேலைகளும் செய்து தரப்படும்.

(CS 941) (3/6) **077 334 1281**

**விதை நெல் விற்பனைக்கு**

இயந்திரம் மூலம் சுத்திகரிக்கப்பட்டு முளைத்திறன் பரிசீலிக்கப்பட்ட அதிகூடிய விளைச்சலைக் கொண்ட BG 406 மற்றும் BG 34.6 இன மூன்றரை மாத விதை நெல் விற்பனைக்குண்டு. (CS 21031) (3/6) **077 659 2044**

**பிரத்தியேக வகுப்புகள் கணிதம்**

யாழ். நகர் பாடசாலை ஆசிரியர்

தரம் 6 - 11

ஆரம்பம்: 05.10.2022 3.00 PM

இல: 12 இராமுப்பிள்ளை வீதி, கொக்குவில் மேற்கு

தொ.பே : 071 604 0644

**வீடியோ & போட்டோ**

நேரடி ஒளிபரப்பு

உங்கள் மகிழ்வான தருணங்களை விசேட விலைக்கழிவுடன் உடனுக்குடன் பெற்றிட அழையுங்கள்!

செந்தமிழன் STUDIO

**077 6405572**






மன்னாரில் கரப்பந்தாட்டத்தை அடுத்த கட்டத்துக்குக் கொண்டுசெல்லும் விதமாக மன்னார் மாவட்ட கரப்பந்தாட்டச் சம்மேளனம் மற்றும் மன்னார் கரப்பந்தாட்ட லீக் இணைந்து நடத்தும் இந்த ஆண்டுக்கான மன்னார் பிறீமியர் லீக் தொடரின் அறிமுக விழா அண்மையில் இடம்பெற்றது. (ம-213)



வவுனியா - கோவில்குளம் ஸ்ரீதேவி பூதேவி சமேத ஸ்ரீ மகாவிஷ்ணு திருக்கோயில் கொடியேற்றம் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ முத்து இரத்தின வைத்தியநாதக் குருக்கள் தலைமையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சிறப்பாக இடம்பெற்றது.

தொடர்ந்து 12 நாள்கள் நடைபெறும் திருவிழாவில் எதிர்வரும் 7ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், 8ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 9ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ய-110)

## Chundikuli Girls' College - Jaffna Vacancy

Applications are invited from qualified candidates for the post of Teacher of Economics

**Requirements:**

- **Should possess a degree in the relevant filed.**
- **Should be able to teach Economics for A/L English and Tamil medium Classes.**

Salary is negotiable and will commensurate with qualifications and Experience

Apply before 07th October 2022 with the names of two non - related referees.

Only Shortlisted candidates would be called for an interview.

**Principal**
**Chundikuli Girls' College,**
**Jaffna.**

**E-mail : forwardcgc@yahoo.com**

(CR 38184) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரம்னே நம

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
23 - 01 - 1936



மறைவு
04 - 10 - 2021

அமரர்
## சந்தியாபிள்ளை நீற்றம்மா

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டியாய்
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு இனியவளாய்
வாழ்ந்து எம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டு ஒன்று மறைந்ததம்மா
எம் உள்ளங்களில் என்றும் நிலைத்திருக்கிறீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நினைவுகளுடன்
**பிள்ளைகள், மருமகன், மருமகள், பேரப்பிள்ளைகள்**

(CS 20960) (3/6)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு
28 - 09 - 1997



இறப்பு
14 - 10 - 2021

## வரதன் நிரோசன்

(திதி. 04.10.2022 )

புன்னகை பூத்த மலரொன்று - பூமியில்
விதைக்கப்பட்ட நாள் - இன்று
ஆண்டு ஒன்று கடந்தாலும் - உங்கள் அருகாமை
நிரப்ப இயலவில்லை - எவராலும்.
நிலையான உங்கள். அன்புக்கு இன்று -
ஊரே தலைவணங்குகிறது.
வார்த்தைகள் மௌனித்தும் சந்தோசங்கள் மரணித்தும்
நிற்கின்றது நீங்கள் இல்லா இடத்தில்
ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனைப் பிரார்த்திக்கும்

**குடும்பத்தினர்**
**பொற்றொழிலாளர் வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி**

(CR 38187) (3/6)

# மரண அறிவித்தல்

தோற்றம்
10 - 08 - 1932



மறைவு
01 - 10 - 2022

## திருமதி மகேஸ்வரி வல்லிபுரம்

சரசாலை வடக்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி வல்லிபுரம் கடந்த (01.10.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் வல்லிபுரத்தின் அன்பு மனைவியும், குமாரசாமி - பொன்னம்மா தம்பதியரின் ஏக புதல்வியும், பொன்னையா - சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், நகுலேஸ்வரி, விமலேஸ்வரி, நகுலேஸ்வரன், கமலேஸ்வரி, ஜெகதீஸ்வரி, ஜெகதீஸ்வரன், காலஞ்சென்ற விமலேஸ்வரன், கமலேஸ்வரன், இலங்கேஸ்வரன், ஆகியோரின் அன்புத் தாயாரும், ஸ்ரீஸ்கந்தராசா, ஸ்ரீஸ்காந்தரூபன், உதயரத்தினம், ஞானச்சந்திரன், இராசகுலேந்திரன், பகீரதி, நிரோசிதா ஆகியோரின் அன்பு மாமியாரும், பானுஜா, ஜானுகா, தனுஷன், துவாரகன், சோபிகா, விசாலிகா, வினுசன், யனுசன், விவேந்தன், பிரணவி, ஜாகவி, துளசிகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.10.2022) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.30 மணிக்கு கொம்பிகுளம் இந்து மயானத்திற்கு கொண்டு செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**“தாயகம்”**
**சரசாலை வடக்கு,**
**சாவகச்சேரி.**

**தகவல் : குடும்பத்தினர்**
**077 748 4425, 077 623 1015**
**077 323 6839**

(CR 38192) (3/6)

# மரண அறிவித்தல்

தோற்றம்
20 - 10 - 1950



மறைவு
03 - 10 - 2022

## சின்னையா இராசரத்தினம்

மீசாலை மேற்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா இராசரத்தினம் அவர்கள் நேற்று (03.10.2022) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - காசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - இராசம்மா தம்பதிகளின் அன்பு மரு மகனும், காலஞ்சென்ற வேதநாயகியின் அன்புக் கணவரும், சயந்தன் (பிரான்ஸ்), பிரசன்னா, பிரதாபன் (பொறியியலாளர் - சிங்கப்பூர்), பிரதீசன் (பொறியியலாளர்), பிரலன்சா (பேராதனைப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தாட்சாயினி (பிரான்ஸ்), சந்திரகுமார், டிலானி, Dr. லலிதாம்பிகா ஆகியோரின் அன்பு மாமனாரும்,. ஆர்க்ரிஷன், அக்ஷரா, இஷான், கிஷானா, ரேஜிஷன், ஆஷிகா ஆகியோரின் அன்புப் பேரனும், ராசலட்சுமி, காலஞ்சென்ற சிவராசா மற்றும் சிவபாலு ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற கதிரவேலு மற்றும் செல்வராணி, பரமேஸ்வரி, தில்லைநாயகி, இராசரத்தினம், நவரத்தினம், விஜயரத்தினம் (சுவிஸ்), குலரத்தினம் (ஜேர்மனி), ஜெயரத்தினம், சுதாமதி (கனடா), சரஸ்வதி, காலஞ்சென்ற இராசபூபதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.10.2022) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்**
**சயந்தன் (மகன்) : + 33652501793, பிரதாபன் (மகன்) : + 6583633054**
**பிரதீசன் (மகன்) : + 94778895525, சந்திரகுமார் (மருமகன்) : 0768629867**
**மீசாலை மேற்கு, மீசாலை.**

(CS 21068) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர் பகிர்கின்றோம்



பிறப்பு 22 . 11 . 1927

இறப்பு 30 . 09 . 2022

எமது Tilko குழுமத்தின் முகாமைத்துவ பணிப்பாளர்

**திரு.தவராஜா திலகராஜ் (திலகர்)**

அவர்களின் அன்புத் தாயார்

**அமரர்**

## ஜெகசோதி அம்மாள் தவராஜா

**(ஓய்வுபெற்ற பாடசாலை அதிபரும் திருமண பதிவாளரும்)**

அவர்கள் கனடாவில் இறைபதம் அடைந்தார்.

அன்பாலே அரவணைத்து அறிவாலே ஆக்கம் தந்த
மாசற்ற மணிவிளக்கே
உங்களது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!!

அன்னாரின் பிரிவால் துயருறும்
Tilko குழுமப் பணியாளர்கள்.

(CR 38193)1-6

# மரண அறிவித்தல்

தோற்றம் 13 . 09 . 1945



மறைவு 03 . 10 . 2022

## திருமதி அரியமலர் இராமநாதன்

யாழ். காரைநகர் விக்காவில் ஆலடியைப் பிறப்பிடமாகவும், கல்லூரி வீதி மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட அரியமலர் இராமநாதன் அவர்கள் நேற்று (03.10.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற சரவணை- செல்வி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஐயம்பிள்ளை- தெய்வானை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஐயம்பிள்ளை இராமநாதன் அவர்களின் அன்பு மனைவியும், வாசன் (லண்டன்), வாசுகி (ஆசிரியை- யா/ மானிப்பாய் சென் ஆன்ஸ் றோ. க. த. க பாடசாலை), வனஜா (ஆசிரியை- யா/சில்லாலை றோ. க. த. க பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும், சயானி (லண்டன்), ஜெயக்குமார் (மொழிபெயர்ப்பாளர்- சண்டிலிப்பாய் பிரேதச செயலகம்), றஞ்ஜித் (றஞ்ஜித் மோட்டோர்ஸ் உரிமையாளர்- மானிப்பாய்) ஆகியோரின் அன்பு மாமியாரும், புஷ்பவதி (இளைப்பாறிய ஆசிரியை), லலிதா (சுவிஸ்), பத்மினி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற முத்துலிங்கம் (ஆசிரியர்), சரவணமுத்து (சுவிஸ்), பன்னீருகரம் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், பவிஷன் (லண்டன்), நவீனயா, சபீஷ், ரோகித் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், எழிலாசினி, ரமணன், ரஞ்சித், பாமிதன் (சுவிஸ்), பார்த்திபன் (சுவிஸ்), பபிதா (சுவிஸ்), காயத்ரி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (05.10.2022) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பிப்பிலி மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு :**
**வாசன் : 0044 7817 705 021 (மகன்)**
**வாசுகி: 0094 7767 051 07 (மகள்)**
**வனஜா: 0094 7705 491 68 (மகள்)**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CS 21075) 1/6

# மரண அறிவித்தல்



## திருமதி
## பசுபதி சிவபாக்கியம்

கலைவாணி வீதி, கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பசுபதி சிவபாக்கியம் கடந்த (02.10.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா கண்ணம்மா ஆகியோரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற கந்தையா பசுபதி (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்புக் மனைவியும், சத்தியதேவி (U.K), யசோதாதேவி (பிரான்ஸ்), இரஞ்சினிதேவி (லண்டன்), தயாபரன் (பிரான்ஸ்), கிரிதரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவனேசன் (U.K), ஜெகதீஸ்வரன் (பிரான்ஸ்), இராசேந்திரன் (U.K), கவிதா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும், அஸ்வினி, ஆருணி, அபிநா (லண்டன்), காயத்திரி, சந்தியா, நந்தியா (பிரான்ஸ்), அபியா, அபினா, கன்னியா, தர்சிகா (பிரான்ஸ்), சிரோன், ஜானு, டடி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், யாயா, தயிஸ், லையிலா, அனா ஆகியோரின் பூட்டியும், மகாலிங்கத்தின் ( மயில்வாகனம்) அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற பொன்னம்மாவின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.10.2022) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கலைவாணி மக்கள் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தோற்றம்**
**19.02.1945**

**மறைவு**
**02.10.2022**

**தகவல்:**
**பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொடிகாமம் தெற்கு முன்பள்ளியின் சிறுவர்தின நிகழ்வு முன்பள்ளித் தலைவர் மா.மணிவண்ணன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது (ய-159)



பளை இந்து ஆரம்பப் பாடசாலையின் மாணவ தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு பாடசாலையின் சிவன் ஆலய முன்றிலில் அதிபர் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. (ய-159)



# இயான் புயலால் இறப்பு 50 ஆனது

வொஷிங்டன், ஒக். 4

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தைத் தாக்கிய இயான் புயலால், உயிரிழந்தோர் எண்ணிக்கை 50 ஐ தாண்டியுள்ளது.

பல நகரங்களில் மணிக்கு 150 மைல் வேகத்தில் சூறாவளிக் காற்று வீசியது. இது தீவிரத்தின் உயர்ந்த நிலை என்று சொல்லப்படுகிறது. புயல் மீட்புப் பணிகளில் இராணுவச் சிப்பாய்கள் களமிறக்கப்பட்டனர். மீட்புப் பணிகள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்தப் புயலால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 51ஆக அதிகரித்துள்ளது. (ம)

## பெயர் மாற்றம்

ஆசைதாசன் பகீதரன் ஆகிய நான் எனது பெயரை இன்று முதல் ஆசைதாசன் பகீரதன் என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் ஆசைதாசன் பகீரதன் என்றே கையொப்பமிட்டு பயன்படுத்துவேன் என இலங்கை சோசலிச குடியரசிற்கு அமைவாக உறுதிப்படுத்துகிறேன்.

ஆசைதாசன் பகீரதன்





வவுனியா கூமாங்குளத்தில் சபரிவாசன் தீர்த்த யாத்திரைக் குழுவினது பஜனை மண்டபத்துக்கான அடிக்கல் நேற்றுமுன்தினம் நடப்பட்டது. சபரிவாசன் தீர்த்த யாத்திரிகை குழுவின் நிர்வாகத்தினர்கள் மற்றும் ஐயப்பன் அடியவர்கள் கலந்து கொண்டு குறித்த மண்டபத்துக்கு அடிக்கல் நட்டனர். (ய-110)

# மரண அறிவித்தல்



## நவாலியூர்
## திருமதி கந்தையா அழகரத்தினம் (அழகம்மா)

நவாலி வடக்கு - புலவர் வீதியை சேர்ந்த திருமதி கந்தையா அழகரத்தினம் நேற்று (03.10.2022) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (04.10.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இடம்பெறும்.

புலவர் வீதி,
நவாலி வடக்கு.

தகவல்:
குடும்பத்தினர்
(ஹேமா குடும்பத்தினர்)

# மரண அறிவித்தல்

பிறப்பு
04 . 03 . 1946



இறப்பு
03 . 10 . 2022

## சின்னம்மா பொன்னையா

7ஆம் வட்டாரம் குமுழமுனையைச்சேர்ந்த சின்னம்மா பொன்னையா நேற்று (03.10.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற உதயகுமார் (கனடா) மற்றும் உதயராசா (ஆசிரியர் யாழ். இந்து மகளீர்கல்லூரி) ,உதயச்சந்திரன் (அலுவலகஉதவியாளர் -கூட்டுறவு உதவி ஆனணயாளர் அலுவலகம் ,(முல்லைத்தீவு) ,உதயரஞ்சினி (நோர்வே) ஆகியோரின் அன்பு அம்மாவும் மெற்றில்டா கௌரி (கனடா),கலாநிதி சுபாஜினி (சிரேஷ்ட விரிவுரையாளர், புவியியற்றுறை,யாழ். பல்கலைக்கழகம்),வனிதமலர் (குமுழமுனை),காந்தரூபன் (நோர்வே) ஆகியோரின் அன்புமாமியும் நிவேதா (கனடா),கவிநிலவன் (யாழ்ப்பாணம்),பிரணவிகா (யாழ்ப்பாணம்),கவிந்தன் (குமுழமுனை), பிறையாழன் (குமுழமுனை), புவிதரன் (குமுழமுனை), சுலக்சன் (நோர்வே),லதுர்ஷிகா (நோர்வே) ஆகியோரின் அன்பு பேர்த்தியும் உதயப்பிரியாவின் (கனடா) அன்புப்பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.10.2022) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாமரைக்கேணி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும் இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உதயராசா 0776798695,
உதயச்சந்திரன் 0771894730

தகவல் :குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சவூதி இளவரசரை சந்தித்த ஜெய்சங்கர்



நியூயோர்க், ஒக். 4

ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற்கச் சென்றிருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், சவுதி அரேபிய இளவரசர் பைசல் பின் பர்ஹான் அல் சவுத்தை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

கடந்த சில ஆண்டுகளாக அரசியல், பாதுகாப்பு, எரிசக்தி, வர்த்தகம், முதலீடு, சுகாதாரம், உணவுப்பாதுகாப்பு, கலாசாரம் மற்றும் பாதுகாப்புத் துறைகளில் இந்தியா சவுதி அரேபியா உறவுகள் கணிசமாக வலுப்பெற்றுள்ளன.

இந்தியா மற்றும் சவுதி அரேபியா இடையேயான இரு தரப்பு உறவுகள் தொடர்பில் இருவரும் கலந்துரையாடினர். இது தொடர்பில் அமைக்கப்பட்டுள்ள 4 குழுக்களின் முன்னேற்றம் தொடர்பிலும் ஆராய்ந்துள்ளனர்.

இருதரப்பும் பரஸ்பர நலன் சார்ந்த பிராந்திய மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்தும் விவாதித்தனர். (ஒ-இ)

## இலங்கையை...

அமெரிக்கா, கனடா, ஜேர்மனி, பிரிட்டன், மலாவி, மொன்டிநீக்ரோ, வடமசடோனியா ஆகிய நாடுகள் இலங்கை குறித்த தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியுள்ளன.

புதிய தீர்மானம் நிறைவேற்றப்படுவதை தடுக்க முடியும் என்று தேவையற்ற நம்பிக்கையைக் கொண்டிருக்கவில்லை என வெளிவிவகார அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கை குறித்த இந்தத் தீர்மானம் இலங்கையின் பொறுப்புக்கூறல் மனித உரிமை மீறல் தொடர்பில் ஆதாரங்களை சேகரிக்கும் பொறிமுறையை வலுப்படுத்துமாறு வேண்டுகோள் விடுக்கின்றது. கடந்த வருட தீர்மானத்தின் அடிப்படையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் இந்தப் பொறிமுறையை உருவாக்கியுள்ளது.

இந்த பொறிமுறை இயங்குவதற்கு மேலும் வளங்களை வழங்குமாறு புதிய தீர்மானம் வேண்டுகோள் விடுக்கவுள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் தீர்மானம் நிறைவேற்றப்படுவதை தடுப்பதற்கான ஆதரவை 47 நாடுகளிடமிருந்து பெற முடியாது என இலங்கை கருதுவதாக வெளிவிவகார அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கைக்கு ஆதரவாக கடந்த காலங்களில் வாக்களித்துவந்துள்ள பங்களாதேஷ், ரஷ்யா போன்ற நாடுகள் இம்முறை மனித உரிமை பேரவையில் உறுப்புரிமை பெறவில்லை. இந்தியா இம்முறையும் வாக்கெடுப்பைத் தவிர்க்கலாம் என்ற எதிர்பார்ப்பு காணப்படுகின்றது. பிராந்திய வல்லரசின் அழுத்தங்கள் காரணமாக நேபாளமும் வாக்கெடுப்பை தவிர்க்கும்.

வழமையாக இலங்கைக்கு ஆதரவளிக்கும் மத்திய கிழக்கு நாடுகளும் இம்முறை வாக்களிப்பைத் தவிர்க்கலாம் என்ற எதிர்பார்ப்பு காணப்படுகின்றது.

இதேவேளை இலங்கை தொடர்பான தீர்மானம் நாளை மறுதினம் வியாழக்கிழமையே வாக்கெடுப்புக்கு விடப்படவுள்ளது. இந்த இறுதி அமர்வில் பங்கேற்பதற்காக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, ஜெனிவாவுக்கு பயணமாகியுள்ளார்.

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்படவுள்ள தீர்மானத்தை, அதன் கனதி குறைந்ததன் காரணமாக தமிழர் தரப்புக்களும் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

## கசிப்புடன்...

அச்சுவேலி சிறுவர் நன்னடத்தை பாடசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளான்.

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியிலேயே சிறுவன் கைது செய்யப்பட்டான் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-23)

## 217 கிலோ...

செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவப் புலனாய்வு பிரிவினருக்கு நேற்று அதிகாலை கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் இராணுவத்தினரால் கேரள கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்ட நிலையில், சம்பவ இடத்திலிருந்து தப்பியோடிய மூவருமே கைது செய்யப்பட்டனர்.

பலாலி அன்ரனிபுரத்தைச் சேர்ந்த 20, 28 மற்றும் 30 வயதுடைய மூவரே பொலிகண்டி பகுதியில் வைத்து வல்வெட்டித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் கேரள கஞ்சா கடத்தல் தொடர்பில் கிடைத்த தகவலையடுத்து நேற்று அதிகாலை அங்கு சென்ற இராணுவத்தினர், கரையொதுங்கி வாடிப்பகுதியில் மறைத்து வைக்கப்பட்டு இருந்த நிலையில் 217 கிலோ கிராம் கேரள கஞ்சாப் பொதிகளை மீட்டனர். அவை வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் கையளிக்கப்பட்டன.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், கஞ்சாப் பொதிகளை கடத்த முற்பட்டனர் என்ற குற்றச்சாட்டில் மூவரைக் கைது செய்தனர். (அ-ஒ-26)

## டீசல்...

மின்சாரத்துறை அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினாக்களின் போது எதிர்க்கட்சியின் உறுப்பினர் முன்வைத்த கேள்விக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மசகு எண்ணெய் ஊடாக மாத்திரம் நாட்டின் ஒட்டுமொத்த எரிபொருள் தேவையையும் பூர்த்தி செய்ய முடியாது. மொத்த எரிபொருள் தேவையின் 30 சதவீதமளவு மாத்திரமே மசகு எண்ணெய் சுத்திரகரிப்பு ஊடாக பெற்றுக்கொள்ளப்படுகிறது.

70 சதவீதமளவு எரிபொருள் இறக்குமதி செய்யப்படுகிறது. உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை குறைவடையும் போது தேசிய மட்டத்தில் எரிபொருளின் விலையைக் குறைக்க முடியாது. டீசல் விநியோகத்தில் இதுவரை காலமும் வழங்கப்பட்ட நிவாரணம் நீக்கப்பட்டுள்ளது.

டீசல் விநியோகத்தின் நிவாரணம் நீக்கப்பட முன்னர் ஒரு லீற்றர் டீசல் விநியோகத்தின் போது 30 ரூபா நட்டத்தை எதிர்கொள்ள நேரிட்டது. ஆகவே தற்போது டீசலின் விலையை குறைக்க முடியாது. பெற்றோல் இறக்குமதியில் 70 சதவீத இலாபத்தை பெற்றுக்கொண்டுள்ளதால் பெற்றோல் விலை குறைக்கப்பட்டது.

எதிர்வரும் 14 நாள்களுக்குள் எரிபொருள் விலை திருத்தம் செய்யப்படும் போது தற்போதைய விலை திருத்தம் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை குறைப்பைக் கொண்டு தேசிய மட்டத்தில் எரிபொருள் விலையை தீர்மானிக்க முடியாது - என்றார். (அ-ஒ-இ)

## பட்டப்பகலில்...

தாக்கிவிட்டு அவர்களைக் கட்டி வைத்து வீட்டிலிருந்த பொருள்கள் மற்றும் பணம் ஆகியவற்றை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர் என்று சாவகச்சேரி பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நாவற்குழி மேற்கு, சித்தி விநாயகர் கோவிலடி பகுதியில் உள்ள வீடொன்றிற்குள் புகுந்த கொள்ளையர்கள், வீட்டிலிருந்த தாயையும், மகனையும் கொடூரமாக தாக்கியுள்ளனர். கொள்ளையர்களின் தாக்குதலில் 17 வயதான மகனின் கை முறிந்துள்ளதுடன், 42 வயதான தாயின் தலையில் காயம் ஏற்பட்டுள்ளது.

காயமடைந்த தாயும் மகனும், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

குடும்பத் தலைவரை இழந்த அந்தக் குடும்பம் வறுமை நிலையில் தமது வாழ்வை கொண்டு நடத்திய நிலையிலையே இந்தக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (அ-ஒ-27)

## நிமோனியாவால்...

உயிரிழந்துள்ளார் என்று அறிக்கையிடப்பட்டுள்ளது.

கடந்த ஒரு வாரமாக காய்ச்சல் காரணமாக பாதிக்கப்பட்ட நிலையில் மருந்து எடுத்துள்ளார். நேற்றைய தினம் வீட்டில் மயங்கி விழுந்துள்ளார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் இறப்பு விசாரணைகளை மேற்கொண்டார். (அ-ஒ-26)

## கடும்...

துள்ளார்.

கடந்த 27ஆம் திகதி வீட்டின் மேசையில் இருந்த அம்மிக்குழவி குறித்த நபரின் காலில் வீழ்ந்துள்ளது. இந்த நிலையில் கடந்த இரண்டு நாள்களாக காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்த நிலையில் அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

நேற்றுமுன்தினம் இரவு அவர் உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-ஒ-26)

## எரிபொருள்...

தெரிவித்துள்ளார்.

கனிய எண்ணெய் விநியோகத்தர்கள் இன்று போராட்டத்தில் ஈடுபடவுள்ளதால் எரிபொருள் விநியோகம் பாதிக்கப்படும் என்று தகவல்கள் வெளியாகியிருந்த நிலையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். (ஒ-இ)

## லிட்ரோ...

மீண்டும் குறைக்கப்படும் என லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார். எரிவாயு விலைச் சூத்திரத்தின்படி, உலக சந்தையில் எரிவாயு விலை மற்றும் இதர செலவுகளுக்கு ஏற்ப இந்த குறைப்பு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. (அ-ஒ-இ)

## கோதுமை மா...

துள்ளன. அவை விரைவில் விநியோகிக்கப்படவுள்ளன. இதனால் கோதுமை மாவின் விலை 250 ரூபா வரையில் குறைவடையும் என்று எதிர்பார்ப்பதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்ணாண்டோ நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார். (அ-ஒ-இ)

## ஹெரோய்ன்...

ஹெரோய்னுடன் 36 வயதுடைய பெண்ணும், 1.3 கிராம் உயிர் கொல்லி ஹெரோய்னுடன் 42 வயதான அவரது கணவரும் நேற்று மாலை கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை - கொக்குவில் பகுதியில் 40 வயதுடைய பெண் ஒருவர் 2.5 கிராம் உயிர் கொல்லி ஹெரோய்னுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தினரால் நேற்று முன்னெடுக்கப்பட்ட அதிரடி நடவடிக்கையின்போதே இந்தக் கைதுகள் இடம்பெற்றுள்ளன.

யாழ்ப்பாணத்தில் உயிர் கொல்லி ஹெரோய்ன் பாவனை அதிகரித்துள்ள நிலையில் அதனை விற்பனை செய்பவர்களை இந்த வாரம் முதல் அதிரடியாகப் பொலிஸார் கைது செய்து வருகின்றனர். மூன்று நாள்களுக்கு முன்னர் பொம்மைவெளிப் பகுதியில் 52 வயதான ஆண் ஒருவர் இதே குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-5-125)

## கிளிநொச்சி...

இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளியம்பொக்கணை பகுதியில் கடந்த முதலாம் திகதி குறித்த நபர் தனது உறவினர் வீட்டுக்கு மூன்று பேருடன் மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளார். இதன் போது, வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் கால்வாயில் விழுந்து விபத்துக்குள்ளானது.

படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அங்கிருந்து மூவரும் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவர்களில் ஒருவரே நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார். ஏனைய இருவரும் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். (அ-ஒ-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஹிஜாப் எதிர்ப்புப் போர் ஈரானில் மேலும் உச்சம்!

## *உயிரிழப்பு 100ஐ தாண்டியது*

**தெஹ்ரோன், ஒக். 4**

**ஈரானில் ஹிஜாப் அணிவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நடைபெற்றுவரும் போராட்டங்கள் தற்போது மேலும் தீவிரம் பெற்றுள்ளன. இந்தப் போராட்டங்களால் அங்கு இதுவரை சுமார் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர்.**

மாஷா அமினி என்ற 22 வயது யுவதி ஹிஜாப்பை சரியாக அணிய வில்லை என்று பொலிஸாரால் அண்மையில் கைதுசெய்யப்பட்டார். கடந்த மாதம் 16ஆம் திகதி விசாரணையின்போது அவர் மர்மமான முறையில் உயிரிழந்தார். பொலிஸாரின் சித்திரவதையை அடுத்தே அவர் உயிரிழந்தார் என்று குற்றஞ்சாட்டி ஈரானில் தொடர்ச்சியாகப் போராட்டங்கள் ஆரம்பித்த நிலையில், தற்போது அந்தப் போராட்டங்கள் தீவிரம் பெற்றுள்ளன.

ஈரானின் தலைநகர் தெஹ்ரோன் உள்ளிட்ட 150க்கும் மேற்பட்ட இடங்களில் ஹிஜாப்புக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களும் போராட்டங்களும் வெடித்துள்ளன. இந்தப் போராட்டங்களில் இதுவரை சுமார் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர். பலநூறு பேர் காயமடைந்துள்ளனர்.

போராட்டத்தை ஒடுக்குவதற்காக அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்ட போதிலும், போராட்டம் நாளுக்கு நாள் தீவிரமாகி வருகின்றது.

போராட்டத்தில் ஈடுபடும் பெண்கள் தமது ஹிஜாப் உடைகளைத் தீவைத்து எரித்தும், தலைமுடியை வெட்டியெறிந்தும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர். (ம)

# மரணச் சூழலை நிறுத்தி பேச்சுக்கு முன்வாருங்கள்

## *பாப்பரசர் பிரான்ஸிஸ் அழைப்பு*



உரோம், ஒக். 4

உக்ரைனில் ஏற்பட்டிருக்கும் மரணச் சூழலை நிறுத்தி, அங்கு அமைதியை நிலைநாட்ட உக்ரைன் மற்றும் ரஷ்ய அதிபர்கள் முன்வர வேண்டும் என்று பாப்பரசர் பிரான்ஸிஸ் அழைப்பு விடுத்துள்ளார். நேட்டோவில் இணைவதற்கு உக்ரைன் மேற்கொண்ட முன்னெடுப்புக்களை அடுத்து உக்ரைன் மீது இராணுவ நடவடிக்கையை அறிவித்தது ரஷ்யா. ரஷ்யாவின் இந்த இராணுவ நடவடிக்கை 200 நாள்களைக் கடந்துள்ள நிலையிலேயே இந்த அறிவிப்பை விடுத்துள்ளார் பாப்பரசர் பிரான்ஸிஸ். இது தொடர்பில் பாப்பரசர் பிரான்ஸிஸ் மேலும் தெரிவித்ததாவது:

உக்ரைனில் நிகழும் வன்முறை மற்றும் மரணச் சூழலை நிறுத்தும்படி ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினைக் கேட்டுக்கொள்கிறேன். அணு ஆயுத ஆபத்து அபத்தமானது. தீவிர அமைதி ஒப்பந்தத்துக்கு திறந்த நிலையில் உக்ரைன் அதிபர் விளாடிமிர் ஷெலன்ஸ்கி முன்வர வேண்டும் - என்றார். (ம)

# லைமன் நகரை மீட்டது உக்ரைன்

கீவ், ஒக். 4

ரஷ்ய எல்லையில் அமைந்துள்ள லைமன் நகரை ரஷ்யக் கட்டுப்பாட்டில் இருந்து மீண்டும் மீட்டது உக்ரைன். உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பை அடுத்து ரஷ்யாவால் உக்ரைனின் பல நகரங்கள் கைப்பற்றப்பட்டன. இவ்வாறு கைப்பற்றப்பட்ட நகரங்கள் மீண்டும் உக்ரைனால் மீட்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையிலேயே லைமன் நகரம் மீண்டும் உக்ரைன் படைகளால் மீட்கப்பட்டுள்ளது. (ம)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் தாவடி சந்திக்கு அருகாமையில் 09 பரப்பு (நிலபரப்பு) காணி விற்பனைக்கு உண்டு.**

- மூன்று பரப்பாக பிரிக்கப் பட்ட நிலையில்.
- K.K.S வீதியில் இருந்து இரண்டாவது காணி.
- பார்வையிடும் நேரம் காலை 09.00- மாலை 06.00 மணி வரை

தொடர்பு- **076 755 8606**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழியில் 15 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு உண்டு.**

- A09 வீதியில் இருந்து 200m தூரம்
- 20 அடிப்பாதையுடன்
- 3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நாவற்குழி சந்தியிலிருந்து 500 m தூரத்தில்
- 1 பரப்பின் விலை - 3 லட்சம் ரூபா மட்டும்.
- பார்வையிடும் நேரம் காலை 09.00- மாலை 06.00

**077 8748135**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடியில் 10 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு உண்டு.**

- A09 வீதியில் இருந்து இரண்டாவது காணி.(50m தூரம்)
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நன்னீருற்று நிலம் நல்ல சூழல்
- வீடுகள். திருமண மண்டபங்கள் அமைக்க ஏற்ற இடம்.
- கைதடி சந்தியிலிருந்து 500 m தூரத்தில்
- 1 பரப்பின் விலை - 6 லட்சம் ரூபா மட்டும்.

தரகர் தேவையில்லை , பார்வையிடும் நேரம் காலை 09.00- மாலை 06.00

**0779116983**
**0770760389**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி **A9** பிரதான வீதியுடன் 13 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- 18 அடிப் பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
- பார்வையிடும் நேரம்

காலை 6 மணிமுதல் மாலை 6 மணி வரை

**தரகர் தேவையில்லை.**

தொடர்பு:- **ஜெயம்**

**077 8147 389**
**077 2417 589**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.10.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.